# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-காஞ்சிபுரம் மாவட்டம்

(01.02.2017 முதல் 05.02.2017 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (27.01.2017 முதல் 30.01.2017)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.17.9 மி.மீ அளவு மழை பெய்த்து. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 30.0-31.0°C மற்றும் 21.0-24.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 86 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 8-15 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 01.02.2017 | 02.02.2017 | 03.02.2017 | 04.02.2017 | 05.02.2017 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்று வரும் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 31 | 31 | 31 | 31 | 31 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 21 | 21 | 20 | 20 | 20 |
| ஈரப்பதம் | 62-77 | 62-77 | 60-72 | 60-72 | 60-72 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. ஆடுகளின் கொட்டகையின் பக்கவாட்டில் தரையிலிருந்து 2-3 அடி உயரத்திற்கு கோணியை கொண்டு இரவு நேரங்களில் மூடுவதன் மூலம் குளிர் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
2. பியுடாக்ஸ் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணிரில் 2-3 மில்லி என்ற அளவில் கலந்து ஆடுகளின் மேல் புறம் தடுவுவதன் மூலம் புறஒட்டுண்ணிகளை நீக்கலாம்.
3. காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
4. உழவர்கள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தண்ணீர் தேங்காமல் உலர்ந்து வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய் மற்றும் ஈ மற்றும் கொசுகளின் பொருக்கத்தை தடுக்கலாம்.
5. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
6. வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. உழவர்கள் நெல் விதையை 0.05 % அளவு கார்பன்டையாசின் என்ற மருந்தினை கொண்டு பதப்படுத்தி உபயோகிப்பதன் மூலம் நடுவு பயிரின் வேர் தாக்கத்தினை தடுக்கலாம்.
2. நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுளோடோப்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டேருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. நெற் பயிரில் குலை நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அல்லது ஒரு மி.லி கார்பன்டாசிம் 50 WP அல்லது டிரைசைக்ஸோல் 75 WP அல்லது மெட்டாமினோஸ்ட்ரோபின் 20 SC அல்லது அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC என்ற அளவில் தெளிக்கவும்.